# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 115/நகராட்சி/2017**

**நாள் : 07/12/2018**

**திரு A. சகாதேவன்,**
**புளியங்குடி.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**புளியங்குடி நகராட்சி,**
**புளியங்குடி.** – **எதிர் மனுதாரர்**

திருநெல்வேலி மாவட்டம், புளியங்குடி, சிந்தாமணி, எண்.1, சான்றோர் நடுத்தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு A. சகாதேவன் அவர்களின் 05.05.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 15.05.2017 அன்று பெறப்பட்டு 115/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர் விசாரணையின் போது அளித்த வாக்குமூலம் மற்றும் புளியங்குடி நகராட்சி ஆணையரின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திருநெல்வேலி மாவட்டம், புளியங்குடி, சிந்தாமணி, எண்.1, சான்றோர் நடுத்தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு A. சகாதேவன் என்பவர், புளியங்குடி நகராட்சிப் பகுதியில், வார்டு எண். 4, 28 மற்றும் 30–இல் பழுதடைந்துள்ள குடிநீர் வழங்கும் கட்டடங்களை அப்புறப்படுத்த 2016–ஆம் ஆண்டிலேயே தீர்மானம் நிறைவேற்றப்பட்டும், வார்டு எண்.4–இல் தன் வீட்டுக்கருகே இருக்கும் பழுதடைந்த குடிநீர் தொட்டி மட்டும் அகற்றப்படாமலேயே உள்ளது என்று தெரிவித்து பழுதடைந்துள்ள அக்கட்டடத்தினை அகற்ற ஆணையிடுமாறு இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரிடம் 13.07.2017 அன்று விசாரிக்கப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. விசாரணையின் போதும், பயனற்ற பழுதடைந்த அக்கட்டடத்தினை மன்றத் தீர்மானத்தின்படி அகற்றப்படாமலேயே உள்ளது என்று உறுதி செய்தார். இது சம்பந்தமாக காவல்துறை ஆய்வாளரிடமும் புகார் செய்யப்பட்டுள்ளதாகவும் விசாரணையின் போது தெரிவித்தார்.

3. புளியங்குடி நகராட்சி ஆணையர் 06.07.2017 நாளிட்ட கடிதத்தில் தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள தண்ணீர் தொட்டி மூலம் சுமார் 415 குடும்பங்களைச் சேர்ந்த 1554 எண்ணிக்கையிலான மக்கள் குடிநீர் அல்லாத பிற பயன்பாட்டிற்கு தண்ணீரை பயன்படுத்துவதுடன், அருகில் உள்ள பள்ளி மாணவர்களும் அத்தொட்டி தண்ணீரை பயன்படுத்தி வருகின்றனர் எனத் தெரிவித்துள்ளார். மேலும், சமூக விரோதிகளால் சேதப்படுத்தப்பட்ட அத்தண்ணீர் தொட்டி சீர்செய்யப்பட்டு விட்டது என்றும் தெரிவித்துள்ளார். நகராட்சி தொழில் நுட்ப அலுவலரான நகராட்சி பொறியாளர் மூலம், ஆணையாளர் நேரில் ஆய்வு செய்து தொட்டி நல்ல நிலையில் உள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், புளியங்குடி, சிந்தாமணி சான்றோர் மடத்து தெரு, கதவு எண்.77–ஏ முகவரியில் வசிக்கும் திரு மா. வைத்தியலிங்கம் என்பவர் மேற்குறிப்பிட்ட தண்ணீர் தொட்டியினை அகற்றக் கோரி 7953/2007 எண்ணிட்ட நீதிப்பேராணை மனுவினை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்கொன்றினை தொடுத்துள்ளார். அவ்வழக்கு நிலுவையில் உள்ளதென்றும் குறிப்பிட்டுள்ளார்.

4. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b)–இன் படி நீதிமன்றமொன்றில் நிலுவையில் உள்ள பொருட்பாடு குறித்து எதனையும் இம்முறைமன்ற நடுவத்தால் எந்தவொரு ஆணையும் பிறப்பிக்க இயலாது. எனவே, முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள பழுதடைந்த தண்ணீர் தொட்டியினை, மேற்குறிப்பிட்ட நீதிமன்ற பேராணை மனுவில் வழங்கப்பட்ட அல்லது வழங்கப்படவுள்ள தீர்ப்பின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு புளியங்குடி நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 7–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பெ. பழனிவேல்

செயலாளருக்காக.

20/12/18

பெறுநர்

1. திரு A. சகாதேவன்,
   சிந்தாமணி,
   எண். 1, சான்றோர் நடுத்தெரு,
   புளியங்குடி,
   திருநெல்வேலி மாவட்டம்..

2. நகராட்சி ஆணையர்,
   புளியங்குடி நகராட்சி,
   புளியங்குடி,
   திருநெல்வேலி மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி